பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 25 செவ்வாய்கிழமை 09.07.2024 கதிர் 244

# வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கு சர்வதேச கொடையாளர் மாநாடு

## சஜித் பிரேமதாஸ யோசனை

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. போரின் பின்னர் இம்மாவட்டங்கள் அபிவிருத்தியின் விடியலை காணவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியைப் பிடித்தமத் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தி, இதுவரை எந்த தலைவர்களும் தலைமைத்துவம் வழங்காத சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்த நாம் நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வட மாகாணம் இதுவரை மாற்றாந்தாய் கவனிப்பையே பெற்றுவந்தது. இந்தயுகத்தை ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்வரும் ஓகஸ்ட் - செப்டெம்பர் மாதமளவில், தேர்தல்களுக்கு முன்பதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின் இடைக்கால செயலகம் உத்தேசித்திருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

நாட்டில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிக்கும் பணிகள் ஆளும் தரப்பினால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டுவரும்நிலையில், அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் விதமாக கலாநிதி அசங்க குணவன்ச தலைமையில் இயங்கிவரும் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறையின்இடைக்காலசெயலக அதிகாரிகள் கடந்த காலங்களில் வட, கிழக்கு உள்ளடங்கலாக நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு பலதரப்பட்ட ☞2

## போராட்டத்தால் நேற்று அரச சேவைகள் பாதிப்பு

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து அரச ஊழியர்கள் நேற்று ஆரம்பித்த சுகயீன லீவு தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பல அரச நிறுவனங்களின் பணிகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்புடன்; கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக அரச ஊழியர்கள் குழு கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தியது.

'நிர்வாகம் அல்லாத அனைத்து அரசு ஊழியர்களுக்கும் 25,000 ரூபா கொடுப்பனவு வழங்கல், நிர்வாக சேவை அதிகாரிகளின் சம்பள முரண்பாடுகளை களைதல் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, அரச சேவையில் ஈடுபடும் 200 தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த சுகவீன விடுமுறைப் போராட்டம் வெற்றியளித்துள்ளதாக அரச மற்றும் மாகாண அரச சேவை தொழிற்சங்கஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த சுகவீன விடுமுறைப் போராட்டம் காரணமாகப் பல சேவைகள் ஸ்தம்பித்துள்ளது. ☞2

## பொதுப் போக்குவரத்துக்கு இனிமேல் டிஜிட்டல் ரிக்கெற்

இந்த வருட இறுதிக்குள் தொடருந்து உள்ளிட்ட பொதுப்போக்குவரத்து சேவைகளில் பயணச்சீட்டுக்குப் பதிலாக இலத்திரனியல் (டிஜிட்டல்) முறைமை அறிமுகப்படுத்தப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் கங்கநாத் ரூபசிங்க தெரிவித்தார்.

'இரண்டு வருட முன்னேற்றமும் எதிர்காலமும்' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் 2022 ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு ☞2

## போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தை திருத்த நடவடிக்கை

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் தலைவர் சசி வெல்கம தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழு சட்டத்தின் கீழ் பேருந்துகளை மட்டுமே ஒழுங்குபடுத்தல் பணிகளை முன்னெடுக்க முடியும். ஆனால் முச்சக்கர வண்டிகள் பாடசாலை மற்றும் அலுவலகப் போக்குவரத்து சேவைகள், டக்ஸிகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தும் வகையில் அந்தச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

இது தவிர, சமூக நலன்புரிக்காக நடத்தப்படும் 'சிசு செரிய' மூலம் சுமார் 5,000 பாடசாலைகளை உள்ளடக்கியவகையில் சுமார் 110,000 பிள்ளைகளுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுகின்றன. மேலும், அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு போக்குவரத்து சேவைகளும் செயல்படுத்தப்படுகிறது. இதுநகர்ப்புற போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும், எரிபொருள் பயன்பாட்டைக் ☞2

## அநீதியான வேலை நிறுத்தங்களால் பிள்ளைகளின் கல்வி வாய்ப்பு பாதிப்பு

### தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கவலை

தேர்தல் நெருங்கும் நேரத்தில் அநீதியானவகையில் வேலை நிறுத்தங்களை முன்னெடுப்பதன் மூலம் பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்துள்ளனர் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

இந்த வேலைநிறுத்தங்கள் மற்றும் போராட்டங்கள் மூலம் மக்களின் நிம்மதியான வாழ்க்கை நிலையை சீர்குலைப்பதுதான் நோக்கமா என்ற கேள்விக்கு எதிர்க்கட்சிகள் பதில் அளிக்க வேண்டும் என்றும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் இதனைத் ☞8

## அறிவியலும் மதமும் ஒன்றாக சந்திக்கும் கட்டத்தில் உள்ளோம்

### ஜனாதிபதி ரணிலின் கருத்து இது

நாம் அறிவியலும் மதமும் ஒன்றாகச் சந்திக்கும் ஒரு கட்டத்தில் இருக்கிறோம். ஆளும் தரப்பு என்ற வகையில், புத்தரின் போதனைகளுக்கும் திரிபிடகத்திலும் இன்றைய ☞9

## ஜனநாயகத்தில் கைவைக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது

### ஹர்ஷண ராஜகருணா எம்.பி. தெரிவிப்பு

ஜனநாயகத்தில் கைவைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட வேண்டுமெனில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட ☞9

## சம்பள அதிகரிப்பு வழங்குவதாயின் 'வற்' வரி 21 சதவீதமாக அதிகரிக்கும்

### அது இப்போது சாத்தியமில்லை என்கிறார் திறைசேரி செயலாளர்

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டுமாயின், தற்போதைய 18 சதவீத வற் வரியை 20 முதல் 21 சதவீதமாக அதிகரிக்க நேரிடும் எனவும், ஆளும் தரப்பால் அத்தகைய கோரிக்கையை நிறைவேற்ற முடியாது எனவும் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் திறைசேரி செயலாளர் இதனைக் குறிப்பிட்டார்.

அரச சேவையுடன் தொடர்புடைய பல தொழிற்சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுத்துள்ள தொழில்சார் நடவடிக்கை தொடர்பில் இக்கலந்துரையாடலில் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு வழங்கக்கூடிய சாதகமான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இவ்வருடம் சம்பள அதிகரிப்பை வழங்கும் சாத்தியக்கூறுகள் இல்லாவிட்டாலும் 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள நிபுணர்குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற் கொண்டு திருத்தம் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அரசஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமாயின் தற்போது அரசுக்கு இருக்கும் செலவீனத்திற்கு ☞2

## இன்றைய போராட்டத்தில் தாதியர்கள் சங்கம் இல்லை

அரசசேவை தொழிற்சங்கங்கள் இரண்டு தினங்களுக்கு முன்னெடுத்துள்ள தொழிற்சங்கப் போராட்டத்தில், தமது தொழிற்சங்கம் பங்கேற்கமாட்டாதென, அகில இலங்கை தாதியர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பி மெதிவத்த இதுதொடர்பில் நேற்று தெரிவித்ததாவது:

சுகாதாரத்துறையினர் வேலை நிறுத்தப் போராட்டத்தை ☞2

## 20 தொடருந்து இயந்திரங்களை அன்பளிப்புச் செய்கிறது இந்தியா

தொடருந்து இயந்திரங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இந்திய அரசு 20 இயந்திரங்களை நன்கொடையாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. அதன் முதல் கட்டத்தை இரண்டு மாதங்களுக்குள் பெற்றுவிடுவோம் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் ☞9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

# அதிபர் ஆசிரியர்களும் இன்று போராட்டத்தில்

தொழிற்சங்க நடவடிக்கைக்கு இணையாக தமது வேதனப் பிரச்சினைக்குத் தீர்வு கோரி இன்றைய தினம் நாடளாவிய ரீதியாக ஆசிரியர், அதிபர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதானச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் இன்றையதினம் பாடசாலைகளை நடத்துவது தொடர்பான அறிவிப்பு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இன்று அனைத்து ஆளும்தரப்புப் பாடசாலைகளும் வழக்கம் போல் நடைபெறும் என்று அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## இனி இது .....

சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்களில் வடக்கு கிழக்கில் கலந்துகொண்ட தமிழர்கள் இந்த ஆணைக்குழுவிற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தபோதும், இதுபோன்ற ஆணைக்குழுக்களில் நம்பிக்கையில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தபோதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை நிராகரித்து சபையில் உரைகளை ஆற்றியிருந்தபோதும் அதனை அமைப்பதில் ஆளும்தரப்பு உறுதியாக நிற்கின்றது.

அதுமாத்திரமன்றி தெற்கில், குறிப்பாக கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் புத்திஜீவிகளை சந்தித்து உத்தேச உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட பல கலந்துரையாடல்களிலும் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி அசங்க குணவன்ச, அதன் கொள்கைப் பிரிவுத் தலைவர் யுவி தங்கராஜா ஆகியோர் தலைமையிலான குழுவினர் கடந்த ஜூன் மாதம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, அநுராதபுரம், புத்தளம், மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கும், இம்மாதம் 2 - 5 ஆம் திகதிகளில் பொலனறுவை மாவட்டத்துக்கும் களப்பயணங்களை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பயணத்தின்போது மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் பிராந்தி யக்கிளை, அரச சார்பற்ற அமைப்புக்கள், மக்கள் பேரவை போன்ற கட்டமைப்புக்களின் அதிகாரிகள், பிரதிநிதிகளுடனும், வலிந்துகாணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள், போர் விதவைகள், முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாகப் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டோருடனும் தனித்தனியாக சந்திப்புக்கள் நடைபெற்றன.

இச்சந்திப்புக்களின்போது போரினால் பாதிக்கப்பட்டோர் முகங்கொடுத்துவரும் பிரச்சினைகள், அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வு, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அவர்களது நிலைப்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதுமாத்திரமன்றி இந்த உத்தேச ஆணைக்குழு தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டுவருவதாக இடைக்கால செயலகம் தெரிவித்துள்ளது.

மேலும், சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரதும் ஆலோசனைகளைப்பெற்று இடைக்கால செயலகத்தினால் தயாரிக்கப்பட்டுவரும் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைபை பெரும்பாலும் எதிர்வரும் ஒகஸ்ட் - செப்டெம்பர் மாதமளவில், தேர்தல்களுக்கு முன்பதாக இயலுமானவரை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இடைக்கால செயலகம் உத்தேசித்திருப்பதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகிறது.

சம்பந்தருக்கு அடுத்து யார் தமிழ் அரசுக்கட்சி நாடாளுமன்றக்குழுவின் தலைவர் என்கிற போட்டியில் மூழ்கிக் கிடக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுபற்றியெல்லாம் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை.

...................

சம்பந்தரின் மறைவை அடுத்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் நிரந்தரமாகச் சமாதி எழுப்பப்படுமா என்பது விரைவில் தெரியவந்துவிடும். இதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது பெயரளவில் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவின் கட்டமைப்பாகத்தான் இருந்துவந்தது. கூட்டமைப்பின் தலைவர் எனப்பட்ட சம்பந்தன், இந்த நாடாளுமன்றக் குழுவின் தலைவராக இருந்தார் என்பதன் அடிப்படையில்தான் கூட்டமைப்பின் தலைவராகவும் செயற்பட்டுவந்தார். எனினும் அவரது இறுதி யாத்திரைக்கு முன்பாகவே இந்தக் கூட்டிலிருந்து ரெலோ, புளொட் ஆகியன வெளியேறி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (சின்ன ரிஎன்ஏ) என்ற புதிய அமைப்பைத் தோற்றுவித்தன. இருப்பினும் நாடாளுமன்றத்தில் அவை தனி அணியாகத் தம்மை அறிவித்துக்கொள்ளவில்லை. இதனால் நாடாளுமன்ற உரைகளை ஆற்றுவதற்கான நேர ஒதுக்கீடு தொடர்பில் சில பல இழுபறிகளும் இருந்து வந்தன.

இப்போது சம்பந்தரின் மறைவுக்குப்பின்னர் கூட்டமைப்பின் இறுதிக் கட்டமைப்பும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. அதன் தலைமையைப் பிடிப்பதில் கண் வைத்திருந்த ரெலோ இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாமா என்று பார்க்கின்றது. கூட்டமைப்புக்குள் தற்போதுள்ள 1-0 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 6 பேர் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். கிழக்கில் மூவர் வடக்கில் மூவராக 6 பேர் இருக்கிறார்கள். ஏனைய நான்கு பேரில் மூவர் ரெலோவைச் சேர்ந்தவர்கள் ஒருவர் புளொட்டைச் சேர்ந்தவர். இந்த நிலையில் செல்வத்திற்கு கூட்டமைப்புத் தலைமைப் பதவி கிட்டுவதற்கான வாய்ப்புக் குறைவு. ஒருவேளை ஒற்றுமை என்ற பெயரில் சிறீதரன் செல்வத்திற்கு ஆதரவளித்து கட்சிக்குத் துரோகமிழைத்தால் தவிர செல்வம் தலைவராக வருவதை நினைத்தும் பார்க்க முடியாது. கட்சியைப் பகைத்துக்கொண்டு அப்படியொரு முடிவை சிறீதரன் எடுக்குமளவிற்கு அவர் அரசியல் அறியாதவர் அல்லர். எனவே கூட்டமைப்பில் இருந்து தாம் வெளியேறி தனித்து சுயாதீனமான நாடாளுமன்ற உறுப்பினர்களாக இயங்கப்போகிறார்கள் என்று ரெலோ மற்றும் புளொட் உறுப்பினர்கள் அறிவிப்பதற்கான வாய்ப்புக்களே அதிகம். முன்னரும் ஒரு தடவை அப்படி இயங்குவது குறித்து அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள். பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டலஸ் அழகப்பெரும தலைமையில் சுயாதீன உறுப்பினர்களாக நாடாளுமன்றத்தில் இயங்குவது போன்று தா-மும் இயங்க முயற்சிக்கலாம் என்ற சிந்தனை ரெலோவிடம் உண்டு. ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறி ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியை உருவாக்கிய வகையிலும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குள் தலைமைதாங்குவதற்கான ஆதரவு கிடைக்காமை காரணமாகவும் ரெலோ வெளியேறி தனித்து இயங்குவதன் மூலம் சம்பந்தருடன் சேர்த்து கூட்டமைப்பிற்கும் நிரந்தர சமாதி கட்டப்படும்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுக்கு கொண்டு வந்து, இந்த மாகாணத்தின், இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி யுகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 297 ஆவது கட்டமாக ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன வன்னி, மன்னார் புனித ஜோசப் கல்லூரிக்கு வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை நூலகத்திற்குத் தேவையான ஆங்கில நூல்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த உதவிகளைப் பெற்று, வடக்கு கிழக்கு இரு மாகாணங்களை மையமாகக் கொண்டு, முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுப்போம். இன, மதம், சாதி, வர்க்கம், கட்சி வேறுபாடின்றி 41 இலட்சம் பிள்ளைகளினது நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பாதுகாத்துத் தருவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வட மாகாணம் இதுவரை மாற்றாந்தாய் கவனிப்பையே பெற்று வந்தது. இந்த யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து, இந்த மாகாணத்தின், இந்த மாவட்டத்தின் அபிவிருத்தி யுகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களைப் பாதுகாத்து போஷித்து பக்க பலத்தை வழங்க ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியலாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், ஆசிரியர் பயிற்றுநர்கள், ஆசிரியர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் போன்றோர் சிறப்பான பணியை ஆற்றிவருகின்றனர். இவர்களின் பிரச்சினைகளை அடையாளம் கண்டு இவர்களுக்கும் முழு உரிமைகளுடன் கூடிய புதிய கல்வி முறைக்கு வலுவூட்டத் தேவையான அதிகபட்ச பக்கபலத்தை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

எமது நாட்டு கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு மீனவ சமூகத்தினால் எமது மீனவ சமூகம் பாரிய பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த பிரச்சினைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் கலந்துரையாடி தொடர்ச்சியாக நிலவிவரும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் வட மாகாண பிரதான ஒருங்கிணைப்பாளர் திருமதி உமாசந்திரா பிரகாஷ் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து

## பொதுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

390 பில்லியன் ரூபாவை ஆளும் தரப்பு வழங்கியுள்ளதாகவும், 300 பில்லியன் ரூபாவை ஒப்பந்தக்காரர்களுக்காகவும் 90 பில்லியன் ரூபா கடனை செலுத்துவதற்காகவும் செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் ஆளும்தரப்பின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் வெற்றியானது, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது என்பதைக் கூற வேண்டும். இதன் மூலம் கடந்த பொருளாதார நெருக்கடியின் போது இடைநடுவில் நிறுத்தப்பட்ட பல திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடிந்துள்ளது. குறிப்பாக, மத்திய அதிவேகப் பாதையின் முதல் கட்டத்தை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மத்திய அதிவேகப் பாதையின் 2ஆம் மற்றும் 3ஆம் கட்டம், ருவன்புர அதிவேகப் பாதைத் திட்டம் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், நிதி முதலீடுகளின் ஊடாக அதுருகிரிய தூண்களின் மேல் அமைக்கப்படும் அதிவேகப் பாதைத் திட்டத்தை நிறைவு செய்வது தொடர்பில் இருதரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக அரச, தனியார் கூட்டு முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## போராட்டத்தால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை வேதனத்தை 20,000 ரூபாவினால் அதிகரித்தல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிறுத்தி அரச சேவையில் ஈடுபடும் 200 தொழிற்சங்கங்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

அரச முகாமைத்துவச் சேவைக்குட்பட்ட சகல தொழிற்சங்கங்கள், அபிவிருத்தி அதிகாரிகள் சேவைக்குட்பட்ட தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல தொழிற்சங்கங்கள் இந்த சுகவீன விடுமுறைப் போராட்டத்திற்கு ஆதரவளித்துள்ளன.

## போக்குவரத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கவும், சூழல் மாசடைதலைக் குறைக்கவும் உதவுகின்றது.

'கெமிசெரிய' மூலம் தொலைதூர கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடிகின்றது. இதேவேளை, மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளுக்கான நேர அட்டவணைகளையும் தயாரித்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

அத்துடன், 0712555555 மற்றும் 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் மூலம் வாடிக்கையாளர் சேவைப் பிரிவைத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பயணிகள் போக்குவரத்து தொடர்பான முறைப்பாடுகள் பெறப்படுவதுடன், பயணிகள் போக்குவரத்து சேவைகள் தொடர்பான தகவல்களும் வழங்கப்படுகின்றன.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ்,

எமது பேருந்துகள் தினமும் 5500 முறைகள் பயணம் மேற்கொள்வதோடு இதன் ஊடாக சுமார் 12 இலட்சம் பயணிகள் தங்கள் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்கின்றனர். டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை முறையாக செயல்படுத்துவதன் மூலம், நமது வருமான இழப்பை முற்றிலுமாக நிறுத்த முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

கடந்த ஆண்டு 400 பேருந்துகளை பழுதுபார்த்து மீண்டும் பயணத்தில் ஈடுபடுத்தியுள்ளோம். இந்த ஆண்டும் 400 பேருந்துகள் பழுதுபார்க்கப்படும். மேலும், 1000 புதிய பேருந்துகளை கொள்வனவு செய்யவும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. அதன்படி 400 பேருந்துகளை உடனடியாக கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிசு செரியவிற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்கள் போன்று, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் சலுகைக் கட்டணத்தில் பேருந்துகளை வழங்குகிறோம். பாடசாலைப் பேருந்துகளுக்கு நாளாந்தம் 811 பேருந்துகளும், பாடசாலை அல்லாத சேவைகளுக்கு 890 பேருந்துகளையும் வழங்குகிறோம் - என்றார்.

## இன்றைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்வதால் நோயாளிகளே பாதிப்புகளை எதிர்நோக்குவர். அரச சேவை தொழிற்சங்கங்கள் நேற்றும் இன்றும் தொழிற்சங்கப் போராட்டமொன்றை மேற்கொண்டு, இரண்டு தினங்களுக்கு பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன. அகில இலங்கை தாதிமார் தொழிற்சங்கம் இந்தப் போராட்டத்தில் பங்கேற்காது.

சுகாதாரத்துறையில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்ட போதும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கான காலம் இதுவல்ல. இந்த உறுதியான நிலைப்பாட்டில் எமது தொழிற்சங்கம் உள்ளது - என்று அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## சம்பள ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலதிகமாக வருடாந்தம் 140 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும், இருபதாயிரம் ரூபாவால் சம்பளம் அதிகரிக்கப்பட்டால் மேலும் 280 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் திறைசேரி செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வருமானத்தைப் பெறுவதற்காக தற்போதைய வருமானத்தை அதிகபட்சமாக நிர்வகித்தாலும், வரிகளும் அதிகரிக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டிய அவர், சம்பளத்தை பத்தாயிரம் ரூபாவினால் அதிகரிக்க, வெட் வரி 2 வீதத்தினால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொழிற்சங்கங்கள் கோரும் சம்பளத்தை அதிகரிப்பதற்கு 3% இற்கு மேல் வெட் அதிகரிக்க வேண்டும் என சுட்டிக்காட்டிய அவர், தற்போது அதை செய்ய இயலாது எனவும் ஏற்கனவே வெட் வரி 18 வீத உச்ச அளவில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளால் முன்பு போன்று மத்திய வங்கியினால் பணம் அச்சிட முடியாது என சுட்டிக்காட்டிய திறைசேரி செயலாளர், அவ்வாறு செய்தால் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்கவும் இங்கு கருத்துத் தெரிவித்ததோடு, அரச ஊழியர்களின் சம்பளத்தை இந்த வருடம் மீண்டும் அதிகரிப்பது கடினமான பணியாக இருந்தாலும், அடுத்த வருட வரவு செலவுத் திட்டத்தில் அதற்கான ஒதுக்கீட்டை வழங்குவதாக ஜனாதிபதி தெளிவாக கூறியுள்ளதாகவும் அவர்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இன ரீதியான பாகுபாட்டிற்கு இடமளிக்க மாட்டேன் ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் முஷாரப் தெரிவிப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

தமிழ், முஸ்லிம், மற்றும் சிங்கள மக்கள் என மூவின மக்களும்ஒற்றுமையாகவாழும்ஒருபிரதேசம்நாவிதன்வெளி பிரதேசமாகும். இங்கு இன ரீதியான செயற்பாடுகளுக்கு நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என நாவிதன்வெளி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப்





தெரிவித்தார்

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச



அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழு தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையில் நாவிதன்வெளி பிரதேசசெயலக கலாசார மத்திய நிலையத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து இங்கு உரையாற்றும் போது -

அரச உத்தியோகத்தர்கள் ஆக இருந்தாலும் சரி அல்லது சாதாரண பொது மக்களாக இருந்தாலும் சரி இங்கு முன்னெடுக்கப்படும். அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இன ரீதியான சிந்தனை கொண்டு பிழையான முன்மாதிரிகளை செய்வதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

பல்லின மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து நமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு இங்கு வாழும் சகல மக்களினதும் பொறுப்பாகும். சமாதானம் நல்லிணக்கத்தோடு எதிர்கால சந்ததிகளுக்கு பொருத்தமான பிரதேசமாக ஒவ்வொரு பிரதேசங்களையும் மாற்ற வேண்டிய பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என நான் கருதுகிறேன். இன்றைய நாள் ஒரு மிக முக்கியமான நாளாகும். ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்த மிக முக்கியமான வழக்கு நேற்று (திங்கட்கிழமை) உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ள படவிருக்கிறது.

எனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் பொதுமக்களின் நலன் கருதி அவசரமாக செலவு செய்யப்பட வேண்டும். உரிய வேலை திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்து கொள்ளுமாறு சகல திணைக்கள தலைவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச பொதுமக்கள் எதிர்கொள்ளும் வீட்டு திட்டம், உரிமய காணி வேலைத்திட்டம், குடிநீர், கல்வி அபிவிருத்தி, சுகாதாரம், மின்சாரம், வீட்டுதிட்டம், வீதி அபிவிருத்தி, பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன அதே நேரம் திணைக்களத் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட சில பிரச்சினைகளுக்கு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைதிட்டங்கள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்றஉறுப்பினர்களானபைசல்காசிம், ரி.கலையரசன் உட்பட உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் றிஸ்வி யஹ்சர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராசா, பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், பொறுப்பு உத்தியோகத்தர்கள், சமூக நிறுவனங்களின் தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(05)

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைப் பாராட்டிக் கௌரவம்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள்பணிமனையால்கடந்தமே மாதம்உணவுப்பாதுகாப்புமாதமாகவும், கடந்த ஜூன் மாதம் 24 - 29 வரை ஒரு வாரகாலம்கைகழுவுதல்விழிப்புணர்வு வாரமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டு பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவினால் கல்முனை பிராந்தியத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த வேலைத்திட்டங்களை



வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஆலோசனைமற்றும்வழிகாட்டல்களை வழங்கியகல்முனைபிராந்தியசுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் நேற்று (திங்கட்கிழமை) பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவினால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில் துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம்.பௌசாத் பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஐ.எல்.எம்.லபீர், உணவு மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதுரியா பானு ஆகியோர்இணைந்துபணிப்பாளரை பாராட்டி கௌரவித்தனர்.

இந்நிகழ்வின்போது பிராந்திய பிரிவுத்தலைவர்கள்,பணிமனையின் உத்தியோகத்தர்கள்ஊழியர்கள்என பலரும் கலந்துகொண்டனர். (05)

## 27 மில்லியன் ரூபா செலவில் நிந்தவூர் 2ஆம் குறுக்குவீதி காபெற்றாக மாற்றம்





(கே எ ஹமீட்)

*2024 ஆம் ஆண்டில் 1,500 கி.மீ வீதி புனரமைப்பு திட்டத்தின் கீழ், நிந்தவூர் 2 ஆம் குறுக்குத் தெரு வீதிக்கு 27 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் காபெற் இடும் பணிகள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.*

*நிந்தவூர் வாழ் பொதுமக்கள் பிரதான போக்குவரத்து மார்க்கமாக இவ் வீதியைப் பயன்படுத்திவருகின்ற காரணத்தால் குறித்த வீதியை காபட்வீதியாகபுனர் நிர்மாணம்செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்டுவந்த தொடர்முயற்சியின் பலனாகவே தற்போது இவ் வீதியானது புனரமைப்பு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)*

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தடைகள் நீங்கின; இனி தேர்தல்தான்

அரசுத் தலைவர் தேர்தலுக்கான சட்டத் தடை ஒன்று ஏற்பட்டுவிடுமோ என்கிற அச்சமும் நீக்கப்பட்டுவிட்டது. இப்போது அனேகமாக அரசுத் தலைவர் தேர்தல் உரிய தருணத்தில் நடக்கும் நிலை தோன்றியுள்ளது. இனி அதனைப் பிற்போட –முடியாது என்பதே நிலை. அரசுத் தலைவரின் பதவிக் காலத்தைத் தெளிவுபடுத்தும் வகையில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்ததன் மூலம் தேர்தலுக்கான அனைத்துக் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் தெளிவான நிலைப்பாடு ஒன்று வரும் வரையில் ஜனாதிபதித் தேர்தலை அறிவிப்பதைத் தடுக்கும் வகையில் உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் நேற்று விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்தது.

இது, மனுதாரரின் வாதமும் கோரிக்கைகளும் அர்த்தமற்றவை என்று குறிப்பிட்டுத் தள்ளுபடி செய்த உயர்நீதிமன்றம், வழக்கின் செலவாக அரசுக்கு ஒரு லட்சம் ரூபா செலுத்தும்படி மனுதாரரைப் பணித்திருக்கின்றது. மேலும் ஒரு மாதத்திற்குள் நீதிமன்ற கட்டணத்தை செலுத்த மனுதாரருக்கு அது உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்பது தெளிவாக உள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாகி பிரதிச் சட்ட மா அதிபர் கனிஷ்க டி சில்வா இதனைத் நீதிமன்றில் தெளிவாகத் தெரிவித்தார். இந்நிலையில், இந்த மனுவை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்யுமாறு இடையிட்டு எதிர்மனுதாரர்களுக்காக முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணிகள் ருமேஷ் டி சில்வா, கனகேஸ்வரன், சாலிய பீரிஸ், சுமந்திரன் உள்ளிட்ட பல சிரேஷ்ட சட்டத்தரணிகள் வாதங்களை முன்வைத்தமையை அடுத்து, மனுவை விசாரணைக்கு ஏற்காமல் தள்ளுபடி செய்திருக்கின்றது உயர்நீதிமன்றம். பிரபல தொழிலதிபர், சி.டி. லெனாவா கடந்த புதன்கிழமை இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, பிரிதி பத்மன் சூரசேன மற்றும் எஸ். துரைராஜா ஆகியோர் அடங்கிய ஐந்து பேர் கொண்ட உயர் நீதிமன்ற ஆயமே இந்த உத்தரவை இன்று வழங்கியது.

தேர்தல்கள் ஆணைக்குழு, அதன் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டிருந்தனர். தேர்தலுக்கானநாள்பற்றியஅறிவிப்புவெளியிடப்படுவதற்கு மிகச் சில நாட்களே இருக்கும் நிலையில் தாக்கல் செய்யப்பட்ட இந் மனுவால் ஏற்பட்ட சந்தேகங்கள் இப்போது தீர்க்கப்பட்டுவிட்டன. அதிலும் அரசுத் தலைவரின் பதவிக் காலம் கேள்விக்கு அப்பாற்பட்டு 5 வருடங்கள் மட்டும்தான் என்பதை நீதிமன்றம் உறுதிப்படுத்திவிட்டது. இதற்குப் பின்னரும் தேர்தலைப் பிற்போடுவதற்கோ நிறுத்துவதற்கோ ஆளும் தரப்புக்கு எந்த முகாந்திரமும் இல்லை. எனவே தேர்தலுக்கும் அனைவரும் தயாராக வேண்டியதுதான்.

உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை அடுத்து இன்னும் ஒரு வார காலத்தில் ஜானாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணையம் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தி முன்னெடுக்கும் வகையில் அதற்கான அதிகாரங்கள் அதன் கைகளில் கிடைத்–துவிடும். அதனடிப்படையில் நீதியான, நியாயமான ஒரு தேர்தல் நடத்தப்படவேண்டும்.



# வாஷிங்டன்; நீர் விநியோகத்திற்கு என்ன ஆனது?

**ஜான் யூன்**

அமெரிக்காவின் முக்கியமான நதிகளில் ஒன்று போடோமக் நதி. அந்த நதி நீரைச் சார்ந்து வாஷிங்டன், ஆர்லிங்டன் மற்றும் வர்ஜீனியா மாநிலங்களில் 9,20,000 பேர் வசிக்கின்றனர். சமீபத்தில் போடோமக் நதியில் பாசி படர்வதைக் கண்டறிந்தனர். இதனால், மக்கள் தண்ணீரை நன்றாக காய்ச்சிக் குடிக்க வேண்டும் என அந்த மாநில அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் நீரின் பாதுகாப்புத்தன்னையை அதிகாரிகள் உறுதிப்படுத்தும் வரை கொதி நீரையே குடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு பென்டகான், ஆர்லிங்டன் தேசிய கல்லறைத் தோட்டம் மற்றும் ரீகன் தேசிய விமான நிலையப் பகுதிகள் வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கொலம்பியா மாவட்ட நீர் மற்றும் கழிவுநீர் ஆணையம் கூறியுள்ளது.

''ஒட்டுமொத்த நகரமும் கொதி நீர் குடிக்க வேண்டும் என்ற அறிவுறுத்தல் வழக்கத்துக்கு மாறானது. இதுபோன்ற ஒரு பெரியளவிலான எச்சரிக்கையை நான் வேலை செய்யும் இந்த 11 ஆண்டுகளில் பார்த்ததில்லை'' என்கிறார் வாஷிங்டன்னைச் சேர்ந்த ஜான் லிஸ்லே. "நீரின் தரம் குறைந்திருப்பதற்கு அடையாளமாகவே இந்த கலங்கலான நீர் இருக்கக்கூடும்" என்கிறது ஆர்லிங்டன் மாநில அறிக்கை.

இந்த நீரில் பாக்டீரியா, வைரஸ், ஒட்டுண்ணிகள் இருக்கலாம். இதனால் குமட்டல், தசைப்பிடிப்பு, வயிற்றுப்போக்கு, தலைவலி போன்ற நோய்கள் வர வாய்ப்புண்டு. இது குழந்தைகள், முதியவர்கள் மற்றும் ஏனையோரின் நோய் எதிர்ப்புச் சக்தியை மிகவும் பாதிக்கும். புதன் கிழமை (03.07.2024) இரவு 9 மணிக்குப் பிறகு தயாரிக்கப்பட்ட பானங்கள், ஐஸ் ஆகியவற்றை வாடிக்கையாளர்கள் பயன்படுத்த வேண்டாம். மேலும், நீரைக் குறைந்தது ஒரு நிமிடமாவது கொதிக்க வைக்கவேண்டும். அந்த நீரைக் குடிப்பதற்கு, பல் துலக்குவதற்கு, உணவுப் பண்டங்களைக் கழுவுவதற்கு, குழந்தைக்கு உணவு தயாரிப்பதற்கு, ஐஸ் தயாரிப்பதற்கோ அல்லது பிராணிகளுக்குக் கொடுப்பதற்கு முன்பு சற்று ஆறவிடவேண்டும் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## போடோமக் நதி நிலைமை சீராவது எப்போது?

டேலகார்லியா நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடந்த பரிசோதனையில் நீர் கலங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நீரில் பாசியும் கலங்கிய நீரின் அளவும் அதிகரிப்பதை அவதானித்தனர். மக்கள் தாங்கள் ஏற்கெனவே பயன்படுத்தும் வடிகட்டிகளில் வடிப்பதிலேயே நீரின் திறன் அதிகரித்துள்ளது. வேண்டுமென்றால், கூடுதலாக இன்னொரு வடிகட்டியையும் பயன்படுத்தலாம் என வாஷிங்டன் வடிகால் அமைப்பை நடந்திவரும் அமெரிக்க ராணுவப் பொறியாளர்கள் கூறியுள்ளனர்.

வாஷிங்டன் வடிகால் அமைப்பு அந்தச் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறும் அளவைக் குறைத்துக்கொண்டு, அதன் தொடக்கமாக அனைத்துச் சுத்திகரிப்பு வசதிகளும் பெறும் வகையில்



மெக்மில்லன் சுத்திகரிப்பு நிலையத்துக்கு மாற்றியது. ஆனாலும், போதுமான அளவுக்கு விநியோகம் செய்ய முடியவில்லை, குறிப்பாக தீ விபத்தின்போது தீயை அணைப்பதற்கு. அதனால், மீண்டும் டேலகார்லியா சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மீண்டும் நீரை எடுத்தனர் வடிகால் அமைப்பின் அதிகாரிகள்.

இதில், 'நீர் பயன்பாட்டுக்கு டேலகார்லியா சுத்திரிகரிப்பு நிலையத்திலிருந்து எடுக்க முடிவுசெய்யப்பட்டதும் ஒரு பகுதிதான். ஏனென்றால், விடுமுறை நாளான ஜூலை 4 அன்று அதிகபடியாக நீர் பயன்படுத்தப்படுவது தெரிகிறது. மேலும் இந்த அறிவிப்பு எப்போது விலக்கப்படும் எனத் தெளிவாகத் தெரியவில்லை' என்கிறார் லிஸ்லே.

வடக்கு வர்ஜீனியாவுக்கு நீரை விநியோகிக்கும் ஃபேர்ஃபாக்ஸ் எனும் நிறுவனம், கொதி நீரைக் குடிக்க வைக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளது. ஏனென்றால், அந்த நிறுவனம் வாஷிங்டன் வடிகால் அமைப்பிடமிருந்து தண்ணீர் வாங்குவதை முன்னதாகவே நிறுத்திவிட்டது.

© த டெலிகிராஃப்

# கிண்ணியா அலிகார் மகாவித்தியாலய சீனடி அணி தேசிய மட்ட போட்டிக்கு





(எப்.முபாரக்)

கிழக்கு மாகாண மட்ட சீனடி போட்டியில்(ஒருவகைதற்காப்புக்கலை) கிண்ணியா அலிகார் மகாவித்தியாலய சீனடி குழுவினர் முதலாம் இடத்தைப் பெற்று, தேசிய மட்ட போட்டியில்

பங்குபற்றுவதற்கான தகுதியை பெற்றுக்கொண்டனர்.

முஸ்லிம் சமய, கலாசார, அலுவல்கள் திணைக்களத்தினால், கிழக்கு மாகாணபாடசாலைகளுக் குகிடையே சனிக்கிழமை காத்தான் குடியில் நடத்தப்பட்டகலாசார போட்டியிலே இந்த வெற்றியை பதிவு செய்துள்ளனர்.

வலயமட்டத்தில் நடைபெற்ற போட்டியிலும் முதலிடம் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இந்த அணியை,தேசியமட்டம்வரைகொண்டு சென்ற, பயிற்றுவிப்பாளரான மகாமாறு சீனடி சங்கத் தலைவர் முகம்மது ராஃபிக்கும்,இதற்காகஉழைத்தஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் வாழ்த்துகளையும் அதிபர் எம். எஸ். அஹமட் ராஜி தெரிவித்துள்ளார்.(05)

# அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை உப தலைவராக உதுமாலெவ்வை தெரிவு



(எம். எப். றிபாஸ்)

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் உப தலைவராக எம். ஐ. உதுமாலெவ்வை(ஜேபி) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அகில இலங்கை வை.எம்.எம்.ஏ பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டம் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற போதே உதுமாலெவ்வை தெரிவு செய்யப்பட்டார்.

இவர் முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அகில இலங்கை சம்மேளனத்தின் முன்னாள் தேசிய தலைவராகவும்,

முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கடமையாற்றியதுடன் தற்போது அக்கரைப்பற்று கல்முனைமாவட்டசாரணர் சங்கத்தின் மாவட்ட ஆணையாளராகவும் செயற்பட்டு வருகிறார்.

சுமார் ஐம்பது வருடங்களாக சமூக சேவையில் ஈடுபாடு கொண்டுள்ள இவருக்கு அண் மையில் ஐம்பதாவது ஆண்டு பொன்விழாவும் கொண்டாடப்பட்டது.

இவரது சமூக சேவைக்கு அரச, தனியார் மற்றும் சமூக சேவை, பொது அமைப்புக்களாலும் பல்வேறுபட்ட பட்டங்களும், பதக்கங்களும், விருதுகளும் வழங்கி கௌரவிக் கப்பட்டுள்ள இவர் ஒரு கிராம உத்தியோ கத்தராகவிருந்து ஓய்வு பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மூதூரில் காதலி சடமாக மீட்பு காதலன் சந்தேகத்தில் கைது



(எப்.முபாரக்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி கிராமத்தில் உள்ள பாழடைந்தகிணறுஒன்றில்படுகொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட தங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த யுவதியின்காதலனானபிரதானசந்தேக நபர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று (திங்கட்கிழமை) மூதூர் நீதிமன்றின் முன்னிலைப் படுத்தப்பட்டபோதுஇன்றுவரைபொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரனை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த படுகொலைச் சம்பவம் தொடர்பில்கடந்தவெள்ளிக்கிழமைஆறு சந்தேக நபர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுகடந்தசனிக்கிழமை மூதூர் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே குறித்த பிரதான சந்தேக நபரான படுகொலை செய்யப்பட்ட யுவதியின் காதலன் ஞாயிற்றுக் கிழமை மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை குறித்த யுவதியின் காதலன், காதலனின் தந்தை, சகோதரி அவரது வீட்டில் வேலை செய்தவர், உட்பட வாகன சாரதி இருவருமாக ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் கிராமத்தைச் சேர்ந்த நடேஸ்குமார்வினோதினி(வயது 25) என்ற யுவதி காணாமல் போயிருந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை பாழடைந்த கிணறு ஒன்றில் கல்லோடு கட்டி போட்டிருந்தநிலையில்சடலமாக மீட்கப்பட்டிருந்தார். இதன்போது அவருடைய ஆவணங்கள் அடங்கிய கைப்பை, உடைந்த தலைக்கவசம் என்பனவும் மீட்கப்பட்டிருந்தன.

குறித்த சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தபோது தலைப்பகுதிதாக்கப்பட்டுமண்டையோடு உடைந்திருந்ததாகவும், தலையின் பிற்பகுதியில் பாரிய துளை இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காதலனின் வீட்டில்இருந்துதாக்குதலுக்குபயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இரும்புக்குழாய் உட்பட சில சான்றுப் பொருள்களையும் மீட்டுள்ளனர். (05)

# இரு பிள்ளைகளுடன் இளம் மனைவியையும் வவுனியாவில் காணோம் என்று முறைப்பாடு



வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த இளம் மனைவி ஒருவரையும் அவரது இரு பிள்ளைகளையும் காணவில்லை என கணவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா, கோவில்புதுக்குளம் பகுதியில் வசித்து வந்த குடும்பம் ஒன்றில் 32 வயதான அ.அபிராமி என்னும் பெயருடைய தனது மனைவி, பிள்ளைகளான கம்சனா (வயது 11), சன்சிகன் (வயது 8) ஆகிய இருவரையும் கடந்த வியாழக்கிழமை பாடசாலைக்கு அழைத்து சென்றுள்ளார்.

எனினும், குறித்த இரு மாணவர்களும் பாடசாலைக்கு செல்லவில்லை. மனைவியும் வீடு திரும்பவில்லை. நானும், உறவினர்களும் பல இடங்களிலும் தேடிய நிலையில் அவர்கள் மூவரும் வீடு திரும்பவில்லை என கணவன் தன் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, மனைவியையும், இரு பிள்ளைகளையும் காணவில்லை என கணவர் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பான தகவல் கிடைத்தோர் 0765273860 என்னும் தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது வவுனியா பொலிஸாருக்கோ தெரியப்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது. (05 - 100)

# வவுனியாவில் சந்கேநபர்கள் இருவர் பொதுமக்களினால் நையப்புடைப்பு

## மாடு கடத்தினர் என்ற குற்றச்சாட்டில்

*வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் மாட்டினைகடத்திச்சென்றஇருவரைமடக்கிப் பிடித்த அப் பகுதி இளைஞர்கள் அவர்களை நையப்புடைத்ததுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.*

*குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -*

*வவுனியா, பத்தினியார் மகிழங்குளம் பகுதியில்காணிஒன்றில்கட்டி நின்றமாட்டினை திருடிச் சென்ற இருவரை தாண்டிக்குளம் பகுதியில் வழி மறித்த இளைஞர்கள் அவர்களை கட்டி வைத்து நையப்புடைத்ததுடன், வவுனியா பொலிஸாருக்கும் தகவல் வழங்கியிருந்தனர்.*

*சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் குறித்தவிடயம்தொடர்பானவிசாரணைகளை முன்னெடுத்தனர். இதன்போது குறித்த இருவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அங்கு ஒன்று கூடிய பொதுமக்கள் பொலிஸாருக்கு தெரிவித்தனர். இதனால் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சற்றுநேரம் முரண்பாடான நிலைமை ஏற்பட்டிருந்தது.*

*எனினும்குறித்தஇருவரையும்கைதுசெய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பொலிஸார் பொதுமக்களிடத்தில் உறுதியளித்த நிலையில் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் வந்தது.*

*அத்துடன் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானகு.திலீபன்சம்பவ இடத்திற்கு சென்று பொலிஸார் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடியதுடன் குறித்த இருவருக்கும் எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு வலியுறுத்தினார்.*

*வவுனியாவில் கடந்த சில மாதங்களாக மாடுகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றமை தொடர்பாக பொதுமக்களால் தொடர்ச்சியான முறைப்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05 - 100)*



## சம்பள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

சம்பள முரண்பாடுகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க விசேடநிபுணர்குழுநியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## அநீதியான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது:

2022 ஆம் ஆண்டிலிருந்து, நமது அமைச்சினால் பெருமளவில் பல்வேறு கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள்செயல்படுத்தப்பட்டன. நாடாளுமன்றத்தில்பலசட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் சிலசட்டமூலங்களைமுன்வைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், உலக வங்கியின் ஆதரவுடன், 2020 முதல் -2030 வரைடிஜிட்டல்பொருளாதாரத்திட்டம் வெளியிடப்பட்டது. தற்போதைய 3 பில்லியன் அமெரிக்க டொலர் டிஜிட்டல் பொருளாதாரத்தை 2030 ஆம் ஆண்டிற்குள் 30 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதே எமது நோக்கமாகும்.

இன்று நாடாளுமன்றத்தில் தொலைத்தொடர்புசட்டத்தில்திருத்தங்களை முன்வைக்க எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச்சட்டம்28ஆண்டுகளுக்குப் பிறகு திருத்தப்படவுள்ளது.

நுகர்வோரைப் பாதுகாப்பதுடன் தொலைபேசி நிறுவனங்களுக்கு இடையிலான போட்டியை நியாயமான போட்டியாக மாற்றுவது இதன் நோக்கங்களில் ஒன்றாகும். முன்பு, இந்த சட்டம் தொலைத்தொடர்பு கட்டமைப்பு அனுமதிப்பத்திரத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்தது. அதன்படி, திருத்தங்களுக்கு அங்கீகாரம் கிடைத்தவுடன் அனுமதிப்பத்திரம் வழங்கும் பொறிமுறையும் மாற்றம் அடையும்.

மேலும், எதிர்காலத்தில் செய்மதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இணைய வசதிகளை வழங்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. கடல்வழி கேபிள் சேவைக்கான அனுமதிப் பத்திரம்மற்றும்ஒழுங்குபடுத்தலுக்கு நாங்கள்தயாராகிவருகிறோம். இந்த ஆண்டு தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டத்தைமுன்வைக்கவும்எதிர்பார்க்கின்றோம்.

மேலும், தொழில்நுட்பம்மற்றும் புத்தாக்க ஆணைக் குழுவை நிறுவவும் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு செய்வதன் மூலம், நாட்டின் அனைத்து அபிவிருத்தி மற்றும் புத்தாக்கங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள்செய்யப்படும். ஆராய்ச்சி, வணிகமயமாக்கப்படுவதுடன் பரிநதுரைகளை வழங்குவதும் இதன் மூலம் முன்னெடுக்கப்பட உள்ளது.

மேலும் தற்போதைய தொழில்சார் நடவடிக்கைகளின்படி அனைத்து அரச ஊழியர்களுக்கும் 20,000 ரூபா கொடுப்பனவு கோரப்பட்டுள்ளது. அந்த கொடுப்பனவை வழங்குவதற்கு வருடத்திற்கு சுமார் 280 பில்லியன் ரூபா மேலதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கும். நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டுஅந்தசெலவுகளை எவ்வாறு ஈடுகட்டுவது என்பதை எதிர்க்கட்சி தெரிவிக்க வேண்டும்.

அத்துடன், தேர்தல் நெருங்கும் வேளையில் அசாதாரண வகையில் போராட்டங்களை முன்னெடுத்தமையினால், பிள்ளைகள் கல்வி கற்கும் வாய்ப்பையும் இழந்துள்ளனர். இறுதியில் சாதாரண பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை வேலைநிறுத்தத்தில் ஈடுபடுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

குறைந்த வருமானம் பெறும் மக்களுக்காக இவ்வருடம் 11 பில்லியன் ரூபா வழங்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் பரிந்துரை செய்துள்ளது. இந்தப் போராட்டங்கள் மூலம் மக்களின் நிவாரண வாழ்வாதாரத்தை சீர்குலைக்க எதிர்க்கட்சிகள் எதிர்பார்க்கின்றனரா என்ற கேள்விக்கு எதிர்க்கட்சிகள் பதில் அளிக்க வேண்டும் என்றார்



## அறிவியலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞான உலகிலும் உள்ள உண்மைகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்வதில் நமது கவனம் குவிந்துள்ளது.

பௌத்த மதத்திற்கும் நாம் தற்போது பயணித்துக் கொண்டிருக்கும் நவீன விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப உலகிற்கும் இடையில் பெரும் தொடர்பு இருப்பதாகவும், உலகம் எதிர்நோக்கும் எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் வழி புத்தரின் போதனைகளில் உள்ளடங்குவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற இலங்கை அமரபுர மகா நிகாயவின் அமரபுர தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அமரபுர மகா நிகாய ஸ்தாபிக் கப்பட்ட பின், முன்னர் செயற்பட்ட வர்களை நினைவுகூர்வது சம்பிரதாயமாக நடைபெறுபெறு கின்றது. அமரபுர நிகாய நவீன இலங்கையின் வரலாற்றின் ஒரு பகுதியாகும். இந்த அரமரபுர மகா நிகாய நமது மஹகராவே சிறீ ஞானவிமலதிஸ்ஸ தேரரின் முயற்சியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நாட்டில் ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சியையும், சிங்கள இயக்கத்தின் பலத்தையும் ஒருங்கிணைத்து, 20ஆம் நூற்றாண்டில், மதம், அரசியல் மற்றும் சமூகம் என்ற அனைத்து துறையினதும் கருத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கையின் சமூகக் கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டது.

அமரபுர மகா நிகாய ஆற்றிய சேவை மிகவும் முக்கியமானதாக கருதப்பட வேண்டும். இந்த நாட்டின் வரலாற்றை உருவாக்குவதற்கான ஒரு சக்தியாக அமரபுர நிகாயவைக் குறிப்பிடலாம்.

நாம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உலகில் வாழ்கிறோம். இன்று உலகம் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு மாறிவிட்டது. குறிப்பாக உலகம் முழுவதும் செயற்கை நுண்ணறிவில் கவனம் செலுத்தும்போது நாமும் அதில் கவனம் செலுத்த வேண்டும்.

அடுத்த 05-10 ஆண்டுகளில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திற்கும் மனதிற்கும் இடையிலான தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும். புத்த மதத்துக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டத்தை ஆளும் தரப்பின் நிதியுதவியின் கீழ் ஆரம்பிக்குமாறு தொழில்நுட்ப அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். மகா சங்கத்தினருடனும், பொது மக்களுடனும் கலந்துரையாடி இப்பணிகளைத் தொடர எதிர்பார்க்கின்றோம்.

நாம் ஒரு சமூகமாக முன்னேற வேண்டும். அதன்போது நாம் பின்வாங்க முடியாது. அனுராதபுர சகாப்தம் நமது நாட்டின் புகழ்பெற்ற சகாப்தமாக கருதப்படுகிறது. அநுராதபுர காலத்தில், மகாவிகாரை, ஜேதவனாராம மற்றும் அபயகிரிய போன்ற முக்கிய விகாரைகள் தோன்றின. அப்போது, பொது மக்கள், பௌத்த துறவிகளும் உட்பட அனைவரும் இந்தப் பிரிவெனாக்களில் கல்வி கற்றனர்.

மஹாசேய, ஜேதவானாராம, அபயகிரிய போன்ற பெரும் அற்புதங்களை நிர்மாணிக்கும் அறிவை எமது மக்கள் இப்பிரிவெனா கல்வியின் மூலம் பெற்றனர் என்பதைக் கூறவேண்டும். மேலும், தற்போதைய பொறியாளர்களையும் ஆச்சரியப்படுத்தும் நமது சிறந்த நீர்ப்பாசன கலாசாரமும், சிகிரியா போன்ற சிறந்த படைப்புகளும் பிரிவெனா கல்வி முறையால் உருவானது.

நவீன அறிவையும் இந்த சிறப்புகளையும் இணைத்துக்கொண்டு ஒரு நாடாக நாம் முன்னேற வேண்டும். இன்று, உலகின் கவனம் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் மீது குவிந்துள்ளது. புத்தரின் போதனைகளில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளத் தேவையான அறிவு உள்ளது.

சுற்றுச்சூழலை பாதுகாப்பது பற்றி சிறுவயதிலிருந்தே நாம் கற்றுக்கொண்டோம் இன்று உலகம் முன்வைக்கும் புதிய சிந்தனைகள் புத்தரின் போதனைகளில் இடம் பெற்றுள்ளன.

நாம் அறிவியலும் மதமும் ஒன்றாகச் சந்திக்கும் ஒரு கட்டத்தில் இருக்கிறோம். ஆளும் தரப்பு என்ற வகையில், புத்தரின் போதனைகளுக்கும் திரிபிடகத்திலும் இன்றைய விஞ்ஞான உலகிலும் உள்ள உண்மைகளுக்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்வதில் நமது கவனம் குவிந்துள்ளது. இதை ஆளும் தரப்பால் மாத்திரம் செய்ய முடியாது, அனைவரும் ஒன்றிணைந்து இப்பணிகளை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

தற்போது மகாவிகாரையில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக பிரித்தானியாவில் உள்ள டர்கெம் பல்கலைக்கழகத்துடன் பேச்சு நடத்தி வருகிறோம்.

டர்கெம் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கனிங்ஹெம் லும்பினி மகாமாயா தேவி விகாரையில் அகழ்வாராய்ச்சிப் பணிகளை மேற்கொண்டவர்.

மகாவிகாரையில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள அவருடன் கலந்துரையாடியுள்ளோம். இந்தச் செயற்பாடுகள் முடிவடைவதற்கு 20- முதல் 25 வருடங்கள் தேவைப்பட்டாலும், எமது வரலாற்றை அடுத்த சந்ததியினருக்கு எடுத்துக் கூறும் வகையில் இந்த செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். அத்துடன் யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் அடுத்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளார்.

அநுராதபுரம் முழுவதிலும் உள்ள அகழ்வாராய்ச்சிப் பணிகள் தொடர்பாக அவரிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்க எதிர்பார்க்கிறேன். இதற்கு குறைந்தது 50 ஆண்டுகள் ஆகும் என்று நமது பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார். எகிப்து அழிந்து 100 ஆண்டுகள் ஆகியும் இன்னும் அகழ்வாராய்ச்சி பணிகள் நிறைவடையவில்லை.

அனுராதபுரம் மகாவிகாரையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கு புதிய நிறுவனமொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றோம். இது திரிபீடகம் உட்பட பௌத்த தத்துவத்தைப் படிக்கும் வாய்ப்பை வழங்குகிறது. இந்த செயற்பாடுகள் அதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை.

மகாயான பௌத்தம் உட்பட அனைத்து தர்மங்களுக்கும் இங்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். புத்தர் போதித்த காலத்தில் இருந்த மதங்கள் அதாவது ஆலரா, காலாமா, உத்தகராம புத்ர தொடர்பில் ஆய்வு செய்ய வேண்டும். உலகில் தத்துவம், வரலாறு, நாகரிகம் மற்றும் பௌத்தத்தின் பரவல் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பௌத்த தத்துவம் தொடர்பான மொழிகளிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். பாலி, கலாச்சாரம், சீனா உள்ளிட்ட மொழி அறிவு அவசியம். மேலும், இன்று உலகில் உள்ள ஏனைய மதங்களைப் பற்றிய அறிவைப் பெற வேண்டும். இன்னும் ஓராண்டில் இதற்கான புதிய நிறுவனத்தை உருவாக்குவது குறித்து தற்போது ஆலோசித்து வருகிறோம். பௌத்தத்திற்கும் நாம் வாழும் நவீன தொழில்நுட்ப உலகிற்கும் இடையே ஒரு பெரிய தொடர்பு உள்ளது. அந்த தொடர்பை புரிந்து கொண்டு முன்னேற வேண்டும்.

இலங்கை அமரபுர மகா நிகாயவின் தலைவர், பதில் மகாநாயக்க வண. கரகொட உயங்கொட மைத்ரி மூர்த்தி மகா நாயக்க தேரர், இலங்கை அமரபுர மகா சங்கத்தின் முன்னாள் செயலாளர் அதி வணக்கத்திற்குரிய வெலிதர ஞானவிமலதிஸ்ஸ தேரர் உள்ளிட்ட முக்கிய மகாநாயக்க தேரர்கள் நினைச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அன்றிலிருந்து இன்றுவரை அமரபுர சங்க சபை எமது நாட்டுக்கு ஆற்றிவரும் சமயப் பணி மகத்தானது என்றே கூற வேண்டும். இந்நிகழ்விற்கு வருகை தந்த மகாநாயக்க தேரர்கள் உட்பட மகா சங்கத்தினரை நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

உன்னத தர்மத்தை அழிக்கும் நபர்கள் மீது கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. விகாரையை கிராமத்தின் மையமாக கொண்டு திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மேலும், அறநெறிப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்த பாடுபட வேண்டும்

## 20 தொடருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் நாயகம் எஸ்.பி.எம் சூரிய பண்டார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கொம்பனித்தெரு, நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தையை இணைக்கும் தொடருந்துப் பாதைக்கு மேலே நிர்மாணிக்கப்பட்ட மேம்பாலத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவுசெய்து அடுத்த வாரம் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது. மேலும், கொஹுவல மேம்பாலம் அதற்கு அடுத்த வாரம் மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்படவுள்ளது. மேலும், துறைமுக நுழைவாயில் பாதையின் பணிகள் செப்டம்பர் முதல் பாதியில் நிறைவடையும்.

இது தவிர வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நாடளாவிய ரீதியில் ஆயிரக்கணக்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் கடந்த பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்ட 1000 கிலோமீற்றர் கிராமப்புற வீதிகள் திட்டத்தின் கீழ் 320 கிலோமீற்றர் கிராமப்புற வீதிகள் பூர்த்தி செய்யப்பட்டு எஞ்சிய தொகையை ஆகஸ்ட் மாதத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

அங்கு கருத்துத் தெரிவித்த பதில் பொது முகாமையாளர் சஞ்சய முதலிகே தெரிவித்ததாவது:

தொடருந்துத் துறைக்கு சொந்தமான சுமார் 12,000 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுக்க மக்களுக்கு வாய்ப்பளித்துள்ளோம். இதன்படி, தற்போதும், தொடருந்துத் துறைக்கு சொந்தமான காணிகளில், அனுமதியின்றி அல்லது அனுமதியுடன் குடியிருப்போர்,

அந்த நிலங்களுக்கு குத்தகைப் பத்திரம் பெறுவதற்காக பதிவு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. பதிவு செய்யாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும், அந்த இடங்களில் இருந்து அவர்களை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், மஹவ- ஓமந்தை தொடருந்துப் பாதையின் நவீனமயமாக்கல் பணிகளை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நிறைவு செய்யப்பட இருப்பதுன், பெலியத்தையிலிருந்து கொழும்புக்கான சரக்குப் போக்குவரத்திற்கான தொடருந்து சேவை எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. விவசாயிகள், வர்த்தகர்கள் உட்பட கொழும்புக்கு பொருட்களை எடுத்துச் செல்வோர் இந்த சேவையைப் பெற முடியும்.

கரையோரப் பாதையில் உள்ள தொடருந்து நிலையங்களை தனியார் துறையினருடன் இணைந்து பல்நோக்கு திட்டங்களாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது, அதன்படி கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி உள்ளிட்ட 6 தொடருந்து நிலையங்கள் தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. தொடருந்து இயந்திரங்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, இந்திய அரசு 20 இயந்திரங்களை நன்கொடையாக வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. அதன் முதல் கட்டத்தை இரண்டு மாதங்களுக்குள் பெற்றுவிடுவோம் - என்றார்.

## ஜனநாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தைத் தீர்மானிப்பது தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை உயர் நீதிமன்றம் நிராகரித்தது தொடர்பாக அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலை நடத்தாமலிருப்பதற்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கின்றார். ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளரும், தவிசாளரும் தொடர்ந்தும் இவ்வாறான கருத்துக்களை தெரிவித்து வந்தனர். ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே வேட்பாளர் என ஒரு சந்தர்ப்பத்தில் கூறிவந்தவர்கள், பின்னர் தேர்தல் நடத்தப்படக்கூடாது எனக் கூற ஆரம்பித்துவிட்டார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் இதே உத்தியையே பின்பற்றினர். தேர்தலுக்கான பணத்தை வழங்குமாறு நீதிமன்றத்தால் நிதி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால் நீதிமன்ற தீர்ப்பையும் கவனத்தில் கொள்ளாது உள்ளூராட்சிமன்றத் தேர்தலை காலம் தாழ்த்தியுள்ளனர். ஜனாதிபதித் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்கும் அதிகாரம் இன்னும் 10 நாட்களில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும்.

ஆணைக்குழுவுக்கு அந்த அதிகாரம் கிடைப்பதற்கு முன்னர் அதைத் தடுக்க நீதிமன்றம் சென்றுள்ளனர். எனினும் நீதிமன்றம் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளது. ஜனநாயகத்தில் கைவைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கான தலைவர் ஒருவர் தெரிவுசெய்யப்பட வேண்டுமெனில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்துபட்ட கூட்டணியொன்று அமைக்கப்படும். அரசியல்வாதிகளை மாத்திரமின்றி நாடளாவிய ரீதியில் 20 இலட்சம் மக்களை எம்முடன் இணைத்துக் கொள்ளும் வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்துள்ளோம். எதிர்வரும் இருவாரங்களில் பெருமளவானோர் எம்முடன் இணைவர் - என்றார்.




# உயர்நிலையில் இருக்கும் இல்லத்தை திட்டமிட்டு அழிக்க சிலர் முன்முயற்சி

## ஆதீன ஆளுநர் சபை கண்டனம்

மிக உயர்ந்த நிலையில் இருக்கும் இல்லத்தைத் திட்டமிட்டு அழிப்பதற்குச் சிலர் முன்வந்திருக்கின்றார்கள். இந்த நிலையில் இல்லத்தின் பாதுகாப்புக்காகத் தொடர்ந்து பொலிஸார் வலியுறுத்தியயன் விளைவாக சென்ற ஆண்டு பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமெராவை அடிப்படையாகவைத்துஅசிங்கமாகபுனைகதைகளை உருவாக்கி இல்லத்தை மூட எத்தனிக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த அரச உயர் அதிகாரிகள் ஒரு சிலர் வேண்டுமென்று திட்டமிட்டு எழுதிய முறைப்பாட்டுக்காகப் பொறுப்பின்றி பெருமை வாய்ந்த பாரிய இல்லத்தை மூடுங்கள் என கூறிய வார்த்தை மிகவும் வேதனை தருகின்றது.

இவ்வாறு நல்லை ஆதீன குருமுதல்வர், யாழ்ப்பாணம்வேதாந்தமடகுருமுதல்வர், கிளிநொச்சி சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார், கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட குருமுதல்வர் ஆகியோர் இணைந்து நல்லை ஆதீன ஆளுநர் சபையூடாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பழைமையும் பெருமையும் வாய்ந்த தெல்லிப் பழை துர்க்காதேவி தேவஸ்தானம் நடத்தும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் (ஆன்மீக விடுதிச் சாலை) தொடர்பாக பொறுப்பற்ற விதத்தில் வெளியிடப்பட்ட விடயம் தொடர்பாக நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

42 வருடங்களாக இலங்கையில் மிகப்பெரிய சைவப் பெண்கள் நிலையமாக விளங்கிவரும் மகளிர் இல்லத்தையும், தன் வாழ்வை அர்ப்பணித்து சைவத்துக்கும்;தமிழுக்கும்பெருந்தொண்டாற்றிவரும் செற்சொற்செல்வர் ஆறுதிருமுருகனையும் திட்டமிட்டு விமர்சித்து யாழ். குடாநாட்டில் வெளிவரும் உதயன் பத்திரிகை வெளியிட்ட செய்தி மிகவும் கொடூரமானது.

அன்னை செல்வி தங்கம்மா அப்பாகுட்டியால் 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இல்லம் போர்க் காலச் சூழலில் எத்தனையோ ஏழைக் குழந்தைகளை வளர்த்தெடுத்தது.

மின்சாரம் இல்லாத காலத்திலும் உணவுத் தட்டுப்பாட்டுக் காலத்திலும் இடப்பெயர்வுகளின் போதும் இவ் இல்லப் பிள்ளைகள் சொல்லொணாத் துயரங்களைச் சந்தித்து வளர்தெடுக்கப்பட்டனர்.

1995 ஆம் ஆண்டு முதல் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியால் இவ்வரிய பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுநிர்வாகத்தில்இணைக்கப்பட்டவர் கலாநிதி ஆறு திருமுருகன்.

14 ஆண்டுகள் நிர்வாக சபையில் பணியாற்றி இணைச் செயலாளராக நியமிக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டில் துன்னையின் மறைவின் பின் பலரது வேண்டுகோளுக்கு அமைய ஆறு திருமுருகன் தலைமைப் பொறுப்பேற்றார்.

அவர் தனது தலைமைப் பொறுப்பில் இருந்தவேளை 2009 யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டு வவுனியாவில் தஞ்சமடைந்த பல பெண்பிள்ளைகளைவவுனியாமாவட்டநீதிமன்றின் அனுமதியுடன் இந்த இல்லத்தில் இணைத்தார்.

சுமார்140பெண்பிள்ளைகளைமிகக்கஷ்டமான காலத்தில் பொறுப்பெடுத்து அவர்கள் இன்று பெரும்பாலும் பட்டதாரிகளாக உயர்நிலையில் வாழ்கின்றார்கள்.

துர்க்காபுரம் மகளிர் இல்லத்துக்கு 2012 ஆம் ஆண்டு புகழ்பூத்த பெண் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனிடம் (இளைப்பாறிய அதிபர், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) இல்லத்தின் பெரும் பொறுப்பை ஒப்படைத்தார்.

மகளிர் இல்லத்தின் முழுப்பொறுப்பையும் இன்றுவரை இந்தப் பெண்மணி சிறப்பாக வழிநடத்துகின்றார். சிறந்த கல்விப் பெறுபேறு கிடைக்கிறது. தற்போது 28 பிள்ளைகள் ஒரே காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்று வருகின்றார்கள். முதலாவது பொறியியல் மாணவி பட்டப்படிப்பை முடித்து பணி செய்கின்றார்.

மிக உயர்ந்த நிலையில் இருக்கும் இல்லத் தைத் திட்டமிட்டு அழிப்பதற்குச் சிலர் முன்வந்திருக் கின்றார்கள். இந்த நிலையில் இல்லத்தின் பாதுகாப்புக்காகத் தொடர்ந்து பொலிஸார் வலியுறுத்தியயன் விளைவாக சென்ற ஆண்டு பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கமராவை அடிப்படையாகவைத்துஅசிங்கமாகபுனைகதைகளை உருவாக்கி இல்லத்தை மூட எத்தனிக்கிறார்கள்.

பொறுப்பு வாய்ந்த அரச உயர் அதிகாரிகள் ஒரு சிலர் வேண்டுமென்று திட்டமிட்டு எழுதிய முறைப்பாட்டுக்காகப் பொறுப்பின்றி பெருமை வாய்ந்த பாரிய இல்லத்தை மூடுங்கள் என கூறிய வார்த்தை மிகவும் வேதனை தருகின்றது.

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் அச்சு ஊடகமாகிய உதயன் பத்திரிகை இயங்கும் கட்டடம் சிவபூமி அறக்கட்டளைக்கு உரித்தானது. அத்தர்மசாசனத்தை ஒப்படைக்க மறுக்கும் இந்த நிறுவனம் திட்டமிட்டு பழிவாங்கும் நோக்கில் ஆறு திருமுருகனது பெயரைக் குறித்து எழுதியதோடு, அவரது சிவபூமி அறக்கட்டளையையும் தேவையில்லாமல் குறித்து பத்திரிகையில் முன்பக்கத்தில் தலைப்புச் செய்தியாக வெளியிட்டமை மாபெரும் தவறாகும்.

இது குறித்து இலங்கையிலுள்ள உயர் சைவ ஆதீனமாகிய நல்லை ஆதீனத்தின் முதல்வரும் ஆதீன ஆளுநர் சபையைச் சார்ந்தவர்களும் எங்கள் கவலையைத் தெரிவிப்பதோடு பொறுப்பற்ற விதத்தில் நடந்த அரச அதிகாரிகளையும் செய்தி வெளியிட்ட பத்திரிகையையும் மிகவும் கண்டித்து எமது கண்டன அறிக்கையை வெளியிடுகிறோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான விடயங்களைக் கையாள்வதில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என வேண்டுகின்றோம்.- என்றுள்ளது.

(05)

# அக்கராய மன்னனின் சிலை நிறுவப்பட்டு 6 ஆண்டு நிறைவு



அக்கராயன் சந்தியில் நிறுவப்பட்ட அக்கராஜன் மன்னனின் சிலை நிறுவிய ஆறு ஆண்டுநினைவுநிகழ்வு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாச்சம் வேழமாலிகிதன் தலைமையில் நடை பெற்ற நினைவு தின நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மன்னனுக்கு பொங்கல் பொங்கி மன்னனின்திருவுருவச்சிலைக்குமலர் மாலை அணிவிக்கப்பட்டது .(05-113)



# பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர் கைது

## அதிரடிப்படை தெரிவிப்பு

துபாயில் தலைமறைவாக உள்ள பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'ஹங்வெல்ல பொடி திலின' என்பவரின் உதவியாளர் ஒருவர் பொலிஸ்விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிரிந்திவெல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை யினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் கிரிந்திவெலபொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட மெத்தேகமபகுதியில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 8 கிராம் 980 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகிய பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கிரிந்திவெல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கடுவலை, கிரிந்திவெல, பூகொடை மற்றும் ஹங்வெல்ல ஆகிய பிரதேசங்களுக்குவட்ஸ்அப்செயலியை பயன்படுத்தி போதைப்பொருள் கடத்தியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கிரிந்திவெல பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (05)

# உலகில் நிம்மதி நிலவுவதற்கு குனூத் நாஸிலா ஓதுவோம்

## புத்தாண்டு வாழ்த்தில் கலீலுர்ரஹ்மான் அழைப்பு

பல்வேறு இன்னல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக் கொண்டு புதிய இஸ்லாமிய புத்தாண்டை சந்தித்திருக்கும் உலகவாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் இனிய முஹர்ரம் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

1445 ஆவது ஹிஜ்ரி வருடம் உலக வாழ் முஸ்லிம்களுக்கு நிம்மதியான பல விடயங்களை கொண்டதாக அமைந்திருந்தாலும் கஷ்டமான பல்வேறு நிலைகளையும் கொண்டிருந்ததுடன் மிக துரிதமாக எம்மை கடந்து சென்று இன்று 1446 எனும் புது வருடத்தில் நாம் கால் பதிக்கின்றோம். இந்த வருடத்திலாவது தினமும் பல நூறு உயிர்களை தினம் தினம் காவுகொடுத்து பரிதவித்து நிற்கும் காஸா முஸ்லிம் சகோதர்கள் உட்பட உலகின் பல்வேறு இடங்களிலும் பல கஷ்டங்களுடன் வாழும் எமது சகோதர்கள் நிம்மதியாக வாழ எமது ஐவேளை தொழுகைகளில் குனூத் நாஷீலா ஓதுவதுடன் எமது துஆக்களை கூட்டிக்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

தனது செய்தியில் மேலும் தெரிவிக்கையில் -

உலகில் தோன்றியுள்ள முரண்பாடுகள் நீங்கி அமைதியான வாழ்க்கை முறை சகலருக்கும் கிட்ட இந்த சந்தர்ப்பத்தில் பிராத்தித்து கொண்டு இலங்கையிலும் உறுதியான ஆட்சிநிலை உருவாகி, நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு நாடு வளர்ச்சிப்பாதைக்கு செல்ல எல்லோரும் பிராத்திப்போம்.

எதிர்வரும் காலங்களில் இலங்கை முஸ்லிம் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரே அணியாக செயற்பட்டு முஸ்லிங்களின் உரிமைகளை எமது நாட்டில் அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் உறுதிப்படுத்த இந்த புத்தாண்டு தினத்தில் திடசங்கடம் பூணுவோம். மேலும் கடந்த காலங்களில் முஸ்லிம் சமுகம் உலகளாவியரீதியில் எதிர்கொண்ட அத்தனை கசப்பான, துயரமான நிகழ்வுகளும் இந்த இனிய இஸ்லாமிய புதுவருடத்துடன் இல்லாதொழிந்து நிம்மதியும் அமைதியுமான வாழ்க்கை நம்மை வந்தடைய இந் நன்நாளில் பிரார்த்திப்போம்.

அன்பர்கள் நண்பர்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவருக்கும் இதயங் கனிந்த இஸ்லாமிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் என்று என்றும் குறிப்பிட்டுள்ளார்.(05)

## வவுனியாவில்

# கட்சி ஆதரவாளர்களுடன் டக்ளஸ் கலந்துரையாடல்

ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) ஆதரவாளர்களுடன் கட்சியின் தலைவரும், கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை சந்திப்பு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், வவுனியா அபிவிருத்தி குழு தலைவருமாகிய கு.திலீபனின் தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஈழமக்கள் ஜனநாயககட்சியின் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள், அபிவிருத்தி நடவடிக்கைகள், தேர்தலை எதிர்கொள்வதுஎனபல்வேறுவிடயங்கள் தொடர்பாக ஆதரவாளர்களின் கேள்விகளுக்குஅமைச்சர் இதன்போது பதில் அளித்திருந்தார். (05 - 100)

# ஆறு திருமுருகனுக்கு அவப்பெயர் ஏற்படுத்தியமைக்குக் கண்டனம்!

## மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை

சைவத்தினதும் தமிழினதும் ஆகப்பெரும்ஆளுமையாகஉள்ளஆறு திருமுருகன் ஐயாவுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் விதமாக வெளியிடப்பட்ட பத்திரிகைசெய்தியைக்கண்டிக்கிறோம்.

தனிப்பட்ட காரணங்களுக்காகப் புகழ்பெற்றமனிதரின்மீதுவன்மத்துடன் இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை தெரிவித்துள்ளது.

காலத்தின்தேவையாகவரலாற்றின் தெரிவாக சைவசமயத்துக்கும் தமிழுக்கும் தொடர்ந்து தொண்டாற்றி தன்வாழ்வையே அதற்காக அர்ப்பணித் துக் கொண்டிருப்பவர் ஐயா ஆறு திருமுருன். திட்டமிட்டு அவர்மீது அவதூறுகளை பரப்புவதை பார்த்து தமிழ்மக்களும் சைவத்தவரும் வாழாவிருப்பது ஏற்புடையதாகாது. அவருக்கு ஆதரவாக உடனிருப்போம் என்று மேலும் தெரிவித்துள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# துர்க்காதேவி மகளிர் இல்லத்துக்கு எதிரான செயற்பாடுகளை நிறுத்துக

## ஜனாதிபதியிடம் பாபுசர்மா கோரிக்கை

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலய மகளிர் இல்லத்துக்கு எதிராக அரச உயரதிகாரிகள் ஒரு சிலரும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகள் இலங்கை வாழ் சைவ இந்து மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செயற்பாடுகள் தனிப்பட்ட பழிவாங்கல் மற்றும் ஒரு மதத்தின் வளர்சியை மழுங்கடிக்கும் திட்டமிட்ட செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலய மகளிர் இல்லத்துக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகளை உடன்நிறுத்தி, பக்கச்சார்பற்ற விதத்தில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளரும், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஒருங்கிணைப்பாளருமான கலாநிதி இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய மகளிர் இல்லத்துக்கு எதிராக அரச உயரதிகாரிகளும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகள் இலங்கை வாழ் சைவ இந்து மக்கள் மத்தியில் மிகுந்த வேதனையையும் மனவருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் செயற்பாடுகள் தனிப்பட்ட பழிவாங்கல் மற்றும் ஒரு மதத்தின் வளர்சியை மழுங்கடிக்கும் திட்டமிட்ட செயற்பாடாகவே நோக்கப்படுகின்றது.

பேச்சுச் சுதந்திரமும் கருத்துச் சுதந்திரமும் உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளாயினும், அதுவே பிறரது சுதந்திரத்துக்குப் பாதகம் தருவதாக இருந்தால் அதனை எவரும் ஏற்கமாட்டார்கள்.

மத நல்லிணக்கம் என்பது ஒரு நாட்டின் ஆரோக்கியமான சூழலுக்கும் முன்னேற்றகாரமான எதிர்காலம் நோக்கிய பயணத்துக்கும் அவசியமானதொன்று. இந்தச் செயற்பாட்டில் நாட்டின் அரசியல் வாதிகளதும் அரச அதிகாரிகளதும் செயற்பாடுகள் காத்திரமிக்கவை. அத்தகைய பொறுப்பு வாய்ந்தவர்களின் பிழையான கருத்துகள் மற்றும் பக்கச் சார்பான செயற்பாடுகள் மத நல்லிணக்கத்துக்கும் மத சுதேசிகளுக்கும் பங்கம் விளைவிப்பதாக அமைந்துவிடும்.

மத ரீதியாகப் பிறர் செய்கின்ற நல்ல காரியங்களுக்குச் சேறுபூசுவதும் அதற்கு ஊடகங்கள் துணை போவதும் பிழையான கருத்துகள் தவறான விதத்தில் சமூகத்தில் பரப்பப்படுவதும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவைக்கும்.

எமது தேசத்தில் சக மதங்களைக் கேலி செய்யும் போக்குகள் கண்டிக்கப்படாமல் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் நிலை கேட்பாரற்றதாகிவிட்டது. இத்தகைய மத நிந்தனைப் பேச்சுக்களுக்கு எதிரான பாரபட்சம் அற்ற கடுமையான சட்டம் அமுலாக்கப்பட வேண்டும்.

மதரீதியாக, உண்மைத் தன்மையோடு நியாய பூர்வமாகச்செயற்படும் சமூக சேவையாளர்களுக்கும் அவர்கள் தம் சேவைகளுக்கும் ஊடகங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் அபகீர்த்தியான செயற்பாடுகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மக்களின் இன மத உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் செயற்படும் ஊடகங்கள் தடைசெய்யப்படவேண்டும்.

இத்தகைய நிலையில் நாம் எமது சைவ மக்கள் சார்பாக, இந்த நாட்டில் சைவசமய செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் கடந்த வாரம், யாழ்பாணம், தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அம்பாள் ஆலயமகளிர் இல்லத்திற்கு எதிராக அரச உயரதிகாரிகளும் ஊடகங்கள் சிலவும் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகளை உடன்நிறுத்தி, பக்கச்சார்பற்ற விதத்தில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.- என்றுள்ளது. (05)

# நிலாவெளி கடலில் மூழ்கிய 6 பேர் மீட்பு



திருகோணமலை பிரதேசத்தில் நிலாவெளி கடலில் மூழ்கி உயிருக்கு போராடிக்கொண்டிருந்த ஆறு பேர் திருகோணமலை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கண்டி, பிலிமதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 16 முதல் 28 வயதுக்குட்பட்ட அறுவரே காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த 6ஆம் திகதி நிலாவெளி கடலில் நீராடிக்கொண்டிருக்கும்போது திடீரென நீரில் மூழ்கியுள்ள நிலையில், அங்கு கடமையில் இருந்த பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் இவர்களை காப்பாற்றியுள்ளனர்.

காப்பற்றப்பட்டவர்களில் ஒருவர் சிகிச்சைக்காக நிலாவெளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தில் தீ விபத்து

## பல ஆவணங்கள் சேதம்

கல்கிஸ்ஸை பிரிவில் உள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் உள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தத் தீ விபத்தில் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இருந்த பலஆவணங்கள்சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ பரவல் ஏற்பட்டபோது பொலிஸ் அத்தியட்சகர் ரொஹான் புஷ்ப குமார அலுவலகத்தில்இல்லைஎனபொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

தெஹிவளை மாநகர சபை அதிகாரிகள் இணைந்து தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தீ விபத்து தொடர்பில் கல்கிஸ்ஸை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(05)

# தனிப்பட்ட பழிவாங்கல்கள் எங்கள் இனத்துக்குச் சாபக்கேடாய் மாறும்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தெரிவிப்பு

சைவஞானபானு, சைவத்திரு ஆறு.திருமுருகன் மீது தனிப்பட்ட பழிவாங்கல்களின் நிமித்தம் அவதூறுகளை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் இரசித்துக்கொண்டிருக்கமாட்டார்கள். இவ்வாறான தனிப்பட்ட பழிவாங்கல்கள் எங்கள் இனத்துக்கே சாபக்கேடாய் அமையும்.

இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர் சின்னத்துரை தனபாலா, பொதுச் செயலாளர் வைத்தியகலாநிதி கி.பிரதாபன் ஆகியோர் இணைந்து அனுப்பி வைத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சைவஞானபானு, சைவத்திரு ஆறு. திருமுருகன், யாழ்ப்பாணத்தில் இருந்து அகில இலங்கை ரீதியிலும் சைவப்பணிகளையும் தமிழ், சமூகப் பணிகளையும் ஒருங்கே முன்னெடுத்துவரும் சிவநேயச்செல்வர்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஓர் ஆன்மீக அரசியல் வாழ்வியல் வழிகாட்டியாக விளங்கிவரும் சிறப்பிற்குரியவர்.

சிவபூமி அறக்கட்டளை, அகில இலங்கை இந்து மாமன்றம், அருள்மிகு துர்க்காதேவி திருக்கோயில் நிர்வாகம் என்று பலதரப்பட்ட வழிகளிலும் ஓயாது பணியாற்றிக்கொண்டிருக்கும் சைவஞானபானுபால் தமிழ் மக்களுக்கு என்றும் அன்பும் நன்றியும் இருக்கும் என்பதை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை தெரிவித்துக் கொள்வது கடமையாகும்.

அருள்மிகு சிவகாமியுடனாய கூத்தப்பெருமானின் திருவருள் சைவஞானபானு ஆறு.திருமுருகன் மீது விளங்கி, காழ்ப்புணர்வால் ஏற்படுத்தப்பட்ட விமர்சனங்களைக் கடந்து, சைவத் தமிழ்ப் பணிகளை மிடுக்குடன் முன்னெடுக்க துணைநிற்க வேண்டிக்கொள்கிறோம்.

தனிப்பட்ட பழிவாங்கல்கள் எங்கள் இனதத்துக்கு சாபக்கேடாய் முடியும் என்பதை அனைத்துத் தரப்பினரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும் என்று எமது சபை மிகவும் கரிசனையோடு வேண்டிக் கொள்கின்றது.- என்றுள்ளது. (05)

# அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்பட்ட கார் பொலிஸாரால் மீட்பு

அத்துருகிரிய துப்பாக்கி பிரயோகத்துக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் கார் ஒன்று கடுவலை, கொரதொட்டை பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அத்துருகிரிய பகுதியில் நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் இடம்பெற்ற அழகு நிலையம் ஒன்றின் திறப்பு விழாவின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 55 வயதுடைய பிரபல வர்த்தகரான சுரேந்திர வசந்த என்பவரும் 38 வயதுடைய நபரொருவரும் உயிரிழந்துள்ள நிலையில், பிரபல பாடகியான கே. சுஜீவா உட்பட 4 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் பெண்ணொருவரும் நபரொருவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மற்றைய இரண்டு பெண்களும் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த துப்பாக்கி பிரயோகத்துக்கு ரி-56 ரக துப்பாக்கிகள் இரண்டு பயன்படுத்தப்பட்டுள்ளன எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் அத்துருகிரிய பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (05)

# நீர் தொட்டியில் விழுந்து 3 வயது குழந்தை இறப்பு

மூன்று வயதுடைய குழந்தையொன்று வீட்டின் நீர் தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என மீத்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு மீத்தெனிய பகுதியை சேர்ந்த 3 வயதுடைய குழந்தையே உயிரிழந்துள்ளார் என மீத்தெனிய பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குழந்தையின் தாய் தனது ஒன்பது வயது குழந்தையையும், உயிரிழந்த மூன்று வயது குழந்தையையும் குளிப்பாட்டுவதற்காக வீட்டிற்கு வெளியே உள்ள நீர் தொட்டி இருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

பின்னர் அவரது ஒன்பது வயது குழந்தையின் உடலைக் கழுவி வீட்டினுள்ளே அழைத்து சென்ற தாய் மூன்று வயது குழந்தையை நீர் தொட்டிக்கு அருகில் இருந்தி விட்டு சென்றுள்ளார்.

மீண்டும் வீட்டிலிருந்து வெளியே வந்த தாய் மூன்று வயது குழந்தையை தேடியபோது குழந்தை நீர் தொட்டிக்குள் விழுந்து கிடப்பதைக் அவதானித்துள்ளார்.

பின்னர் குழந்தை மீட்கப்பட்டு மீத்தெனிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

(05)

# கவ்தருக்கு கௌரவம்

(எம்.எம்.ஜெஸ்மின்)

ஜாமியா நளீமியா கலாபீடத்தில் 23 வருடங்கள் கல்வித்துறை தலைவராகவும் பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்த மௌலானா ஷஹீதுல்லாஹ் கவ்தர் அவர்களை நாட்டுக்கு அழைத்து ஜாமியா நளீமியா பழைய மாணவர்கள் கௌரவித்தனர்.

இதன் போது கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடி பிரதேசத்திற்கும் அவர் விஜயம் செய்தார்.

காத்தான்குடியில் ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி இஸ்லாமிய வழிகாட்டல் நிலையம் மற்றும் பிஸ்மி இடைநிலைப் பாடசாலை உட்பட பல்வேறு இடங்களுக்கும் சென்ற அவர் மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் சந்தித்தார்.

இதன் போது காத்தான்குடியைச் சேர்ந்த ஜாமியா நளீமியா பழைய மாணவர்கள் அவருக்கு இங்கும் ஒரு கௌரவித்தினை வழங்கினர்

இதேபோன்று ஜாமியா நளீமியா பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து பழைய மாணவர் அமைப்பினால் கொழும்பில் அவருக்கு மகத்தான கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)

காலைக்கதிர் Kalaikkathir




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.07.2024இல் வெளியிடப்பெற்றது